தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

1987, ஏப்ரல் 1, புதன்கிழமை

பங்குனி 18, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பருவத்தொடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.''

காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல், நில்லாத இயல்புடைய செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு பயிற்சி நிலையம்

231—(*வினா எண். 8798) திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நெல்லிக்குப்பத்தில் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நெல்லிக்குப்பத்தில் புதிய கூட்டுறவுப்பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

பெரியார் மாவட்டம் சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

232—(*வினா எண். 10153) திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், சென்னிமலையில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.